# உங்கள் தகவல் அந்தரங்கமானவை

## இச் சேவையின் நுகர்வோராக உள்ளபோது உங்களைப் பற்றிய தகவல்களுக்கு என்ன நடக்கும்?

### நாம் யார்?

உங்கள் நலத்தின் தேவைகட்காக சேர்ந்து உழைக்கும் பல்வேறு சுகாதார சமூகப் பாதுகாப்பு சேவைகளில் ஒன்றாகும்.

### உங்களைப் பற்றி என்ன தகவல்களை நாம் சேகரிக்கிறோம்?

உங்களது நுகர்வோர் பதிவேட்டில் உங்கள் பெயர் தொடர்பு விவரங்கள் உள்ளன. நீங்கள் ஒவ்வொரு முறையும் எங்களைச் சந்திக்கும் போதும் உங்கள் நலம் அதைப் பாதுகாக்கும் திட்டங்கள் போன்ற மற்ற விபரங்கள் பதிவாகின்றன.

### உங்களைப் பற்றிய தகவல்களை ஏன் சேகரிக்கிறோம்?

நாங்கள் சேகரிக்கும் உங்கள் தேவைகள் பற்றிய விபரங்கள் சரிபார்க்கப் படுவதால் உங்களுக்கு சிறந்த முறையில் சேவையளிக்க முடிகிறது. மேலும் சேவைகளை நன்றாகத் திட்டமிடவும் நிர்வகிக்கவும் இத் தகவல்களை நாம் உபயோகப்படுத்துகிறோம்.

### வேறு யார் உங்கள் தகவல்களை அறிவார்கள்?

உங்கள் கவனிப்பில் சம்பந்தப்பட்டுள்ள இச் சேவையில் உள்ள தொழில் வல்லுநர்கள் மட்டுமே இதைப் பார்க்கமுடியும். மற்றப்படி நீங்கள் இணங்கினால் மருத்துவ அவசரநிலை போன்ற சட்டத்தின் பிரகாரம் தேவைப்படும் வேளைகளில் மட்டுமே விவரங்கள் வெளியிடப்படும்.

### உங்கள் உங்களைப் பற்றிய தகவல்களுக்கு என்ன நடக்கும் என்பதில் உங்கள் பங்கு என்ன?

உங்கள் தகவல்களுக்கு என்ன நடக்கும் என்பதற்கு உங்களது கருத்தைக் கூற உரிமைகள் உண்டு. உங்களுக்கு சரியான கவனிப்பு வழங்குவதற்கு நாங்கள் நீங்கள் தரும் தகவல்களில் தங்கி இருக்கிறோம். நீங்கள் சில தகவல்களைப் பகிர்ந்து கொள்ள விரும்பாவிட்டால் அல்லது உங்களது நுகர்வோர் பதிவை அணுகுவதை கட்டுப்படுத்த விரும்பினால் அவற்றைத் தடை செய்ய உங்களுக்கு உரிமை உண்டு. ஆனால் இவை நாங்கள் உங்களுக்குச் சிறந்த முறையில் சேவை செய்வதைப் பாதிக்கலாம். நீங்கள் உங்களது ஒப்புதலை மாற்றவோ அல்லது ரத்துச் செய்யவோ விரும்பின் எம்முடன் பேசவும்.

### உங்கள் தகவல்கள் எப்படிப் பாதுகாக்கப்படுகின்றன?

உங்கள் தகவல்களை இரகசியமாகப் பாதுகாப்பது எமது கடமை. சட்டமும் உங்கள் தகவல்களை இரகசியமாகப் பாதுகாக்கும்.

உங்கள் விவரங்களை நாம் மிகவும் கடுமையாகப் பாதுகாத்து பத்திரப்படுத்துவோம்

### உங்கள் தகவல்களை நீங்கள் அணுகமுடியுமா?

ஆம். நீங்கள் உங்களைப் பற்றிய தகவல்களைப் பார்க்கவும், தேவைப்படின் திருத்தவும் உரிமை உண்டு.

### வேறு ஏதாவது கேள்விகளா?

நீங்கள் உங்களது சேவையின் நுகர்வோராய் உள்ளபோது உங்களைப் பற்றிய தகவல்களுக்கு என்ன நடக்கும் என்பது பற்றி வேறு கேள்விகளோ அல்லது புகார்களோ இருந்தால் அல்லது உங்களைப் பற்றிய பதிவேட்டினைப் பார்க்க விரும்பினால் எமது அலுவலர்கள் யாருடனாவது தயவு செய்து பேசுங்கள்.

The Department of Human Services, 2009

Victoria
The Place To Be